2006 செப்டம்பர் 2] [பேராசிரியர் க. அன்பழகன்]

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)– தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.